OS.No. 29/2020

நாள் :18.10.2023

வா.சா.1

பெயர் :முருகேசன்

குறுக்கு விசாரணை

03.10.2015 அன்று என்மீது துறைரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அதற்கான குறிப்பாணை வழங்கப்பட்டது என்றால் சரிதான். 22.12.1998 முதல் 07.11.1999 வரையிலான காலத்திற்கு எனக்கு நிறுத்தப்பட்ட சம்பளத்தை வழங்கும்படி எங்கள் அலுவலகத்தில் இருந்து 19.07.2018 ஆம் தேதி பில் அனுப்பப்பட்டுள்ளது. 20.03.2017 தேதியிட்ட பில் 2015 முதல் 2017 வரையிலான காலக்கட்டத்திற்கு அதேபோலவே நிறுத்தப்பட்ட சம்பளத்தை வழங்கும்படி பில் அனுப்பப்பட்டது. 16.03.2012 ஆம் தேதி அதேபோலவே பில் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். 16.06.2015 ஆம் தேதி அதேபோலவே பில் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். 06.05.2013 ஆம் தேதி அதேபோலவே பில் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். 16.07.2018 ஆம் தேதியும் அதேபோல் பில் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். தேதி குறிப்பிடமால் ரூ.13,545/- க்கான பில் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். 22.08.2012 ஆம் தேதி நிறுத்தப்பட்ட சம்பளத்தை வழங்கும்படி பில் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். 16.07.2018 தேதி அன்றும் அதேபோலவே பில் அனுப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவை அனைத்தும் வா.சா.ஆ 7 ல் காணப்படுகிறது என்றால் சரிதான். 13.02.2019 ஆம் தேதி ரூ.3,92,349/- வழங்கப்பட்டதாக பென்சன் பெயிமண்ட் ஆர்டர் உத்தரவில் கூறப்பட்டுள்ளது. ரூ.7,87,373/- தொகையினை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்று குறிபிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. Amount with held if any balance amount authorised Rs. 7,87,373/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் எனக்கு அது பொறுந்தாது. மேற்படி தொகை எனக்கு வழங்கப்பட்டுவிட்டது. அதை எனது வங்கி கணக்கு புத்தகத்தை பார்த்தால்தான் எனக்கு தெரியும். 17.09.2016 தேதியன்று சரண் என்பவர் எனக்கு ரூ.3 லட்சம் அனுப்பியதாக வா.சா.ஆ 8 ல்

குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி தொகையை உடனடியாக நான் எடுத்துகொண்டேன் என்றால் சரியல்ல. சிறிது சிறிதாக எடுத்தேன். சரண் என்பவர் எனது மகன் ஆவார். 04.11.2016 அன்று எனது வங்கி கணக்கில் ரூ.718 இருந்ததாக காணப்படுகிறது என்றால் சரிதான். எனது ஓய்வூதிய பணபலன்களை கொண்டு பிரதிவாதிக்கு பணம் கொடுத்ததாக கூறுவது உண்மை அல்ல என்றும், பிரதிவாதி என்னிடம் எப்போதும் கடன் பெற்றதில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் ஓய்வூதிய தொகையை வேறு வழியில் முதலீடு செய்தால் அதை எனது வருமானவரி கணக்கில் குறிப்பிட வேண்டும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 7 மற்றும் வா.சா.ஆ 8 ஆவணத்திற்கும் இவ்வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.